UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2016 ஆகஸ்ட்

## TAMIL I / தமிழ் I - (TG I)

## தமிழ் மொழி வரலாறும் இலக்கண மரபுகளும்

(மூன்று மணித்தியாலம்)

---

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

### பகுதி 1

1. திராவிட மொழிக் குடும்பமும் தமிழும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

2. பழந்தமிழில் இருந்து தற்காலத் தமிழ் வரை மூவிடப் பெயர்களில் ஏற்பட்டுவந்த மாற்றங்களை விளக்குக.

3. செய்யுள் நடையே ஆதிக்கம் பெற்றிருந்த தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து நவீன உரைநடை தோன்றி வளர்வதற்குச் சாதகமாய் அமைந்த காரணிகளை ஆராய்க.

4. எழுத்துச் சீர்திருத்தம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, அச்சியந்திரத்தின் வருகையின் பின்னர் இதுவரை தமிழில் மேற்கொள்ளப்பட்ட எழுத்துச் சீர்திருத்தங்கள் பற்றியும் இன்னும் எழுத்துச் சீர்திருத்தம் தேவையா என்பது பற்றியும் ஆராய்க.

## பகுதி 11

5. தமிழ் இலக்கண மரபில் தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் ஆகிய இலக்கண நூல்களின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

6. தமிழ் இலக்கண நூல்கள் எழுத்திலக்கணத்தை எவ்வாறு வகைப்படுத்தி விளக்குகின்றன என்பதை ஆராய்க.

7. தமிழ் இலக்கண நூல்கள் குறிப்புவினை பற்றிக் கூறுவனவற்றைத் தெளிவுபடுத்தி, தற்காலத் தமிழைப் பொறுத்தவரை குறிப்புவினை என்ற வகைப்பாடு அவசியமா என ஆராய்க

8. தற்காலத் தமிழில் வினைச் சொற்களை முதல்வினை, துணைவினை என வகைப்படுத்துவதன் அடிப்படையை விளக்குக

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2016 ஆகஸ்ட்

# TAMIL - II / தமிழ் - II (TG - II)

## குறிப்பிட்ட பாட நூல்கள்

(மூன்று மணித்தியாலம்)

---

இவ்வினாத்தாளில் எல்லாமாக **08** வினாக்கள் உள்ளன

**முதலாம்** பகுதியிலுள்ள வினாவுக்கும் **இரண்டாம்** பகுதியிலுள்ள

எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

## பகுதி I

01. மேல்வரும் பாடல்களின் சிறப்பினை விளக்குக.

(அ) வான் கடற் பரப்பில் தூவற்கு எதிரிய,
மீன் கண்டன்ன மெல் அரும்பு ஊழ்த்த,
முடவு முதிர் புன்னைத் தடவு நிலை மாச் சினை,
புள் இறை கூரும் மெல்லம் புலம்ப! –
நெய்தல் உண்கண் பைதல கலுழ,
பிரிதல் எண்ணினை ஆயின், நன்றும்
அரிது உற்றனையால் - பெரும ! உரிதினின்
கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும் - கொண்டலொடு
குரூஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந் திமில் கொன்ற புது வலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி,
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே.

(ஆ) ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென

அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசை கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் ப∴றுளி மணலினும் பலவே.

## பகுதி II

02. அக நானூற்றுப் பாடல்களில் தோழியின் மதிநுட்பம் புலப்படுமாற்றை விபரிக்குக.

03. சங்கப் புறத்திணைப்பாடல்கள் அரசுகள், அவற்றின் ஆள்புலம், அரசர்களின் வீரம், கொடை ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறுமாற்றை புறநானூற்றுப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

04. அரசுக்குரிய இன்றியமையாப் பண்புகள் எவை எவையென வள்ளுவர் விளக்குமாற்றில் உள்ள சிறப்புகளை விபரிக்குக.

05. ஆண்டாளின் பக்தி அனுபவம் நாச்சியார் திருமொழியில் படிப்படியாக வளர்ந்து உச்சநிலை பெறுமாற்றை விபரிக்குக.

06. பாரதியின் குயிற்பாட்டு 'பட்டப்பகலில் பாவலர்க்குத் தோன்றுவதோர் நெட்டைக் கனவே.' இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

**அல்லது**

"பாரதியின் சுயசரிதை நம்பிக்கை வறட்சியின் வெளிப்பாடே" அலசுக.

07. கண்ணப்ப நாயனாரின் பக்தி அனுபவ வெளிப்பாட்டை சேக்கிழார் சித்திரிப்பதில் உள்ள சிறப்புகளை அலசுக.

08. "இலங்கையர்கோன் கதைகள் யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தின் கூட்டுக்கலவையான வெளிப்பாடே" கருத்துரை வழங்குக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2016 ஆகஸ்ட்

**TAMIL - III / தமிழ் - III ( TG III)**

## சோழர்காலம் முதல் நவீனகாலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக்கோட்பாடுகளும்

நேரம் : மூன்று மணித்தியாலம்

---

இவ்வினாப் பத்திரத்தில் எல்லாமாகப் **பத்து**(10) வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

### பகுதி I

01. சோழர் காலத்தைக் காப்பியகாலம் என்று குறிப்பிடுவது எத்துணைப் பொருத்தம் என்பதை விளக்குக.

02. பொதுமக்கள்சார்பு இலக்கிய வளர்ச்சியில் விஜயநகர நாயக்கர் காலத்தின் பங்களிப்பினைத் தெளிவுறுத்துக.

03. “ஐரோப்பியர் காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நவீன சிந்தனைகளைப் புகுத்தியது.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

04. “தமிழ்க்கவிதையைப் புதிய பாதையில் திசைதிருப்பியவர் பாரதி.” கருத்துரை வழங்குக.

05. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

அ) திருத்தக்க தேவர்

ஆ) வீரமாமுனிவர்

இ) கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை

ஈ) கல்கி

## பகுதி II

06. இலக்கிய வளர்ச்சிக்குத் திறனாய்வு எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தெளிவுறுத்துக.

07. “திறனாய்வு என்பது குறைகளைக் கண்டிப்பது மாத்திரமன்று, அது நிறைகளையும் எடுத்துரைப்பதாகும்.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

08. இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளில் உணர்ச்சிக் கொள்கையையும், அழகியல் கொள்கையையும் ஒப்பிடுக.

09. நீர் அண்மையில் படித்த நாவல் ஒன்றினைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுக.

10. பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

### ஈசவனுக்கும் மலர்

வெள்ளைநிற மல்லிகையோ,
வேறெந்த மாமலரோ,
வள்ள லடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல,
வேறெந்த மலருமல்ல,
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ,
கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல,
கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி
கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ,
பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்ட முறாதவர்க்கு
வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல,
பாரிலில்லாப் பூவுமல்ல,
நாட்டவிழி நெய்தலடி
நாயகனார் வேண்டுவது.